# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 257/மா/2022**

**நாள்: 11.07.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02, (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 14.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.12.2022–ல் பெறப்பட்டு 257/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 14.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

மதுரை மாநகராட்சி மண்டலம் - 2, வார்டு 22 தத்தநேரி மெயின் ரோடு கதவு எண்187, மதுரை 18ல் இயங்கிவரும், NTC மருத்துவமனை (NTC Hospital) தரை தளம் மற்றும் மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனையாகும். 24 மணி நேரமும் செயல்பட கூடியதும், பல மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலக பணியாளர், துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் இரவு காவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி NTC மருத்துவமனை பல படுக்கைகள் உள்ளது. மதுரை மாநகராட்சியால் திட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ள இம்மருத்துவமனைக்கு பின்புறத்தில சில சதுர அடிகள் ஆற்று புறம்போக்கு இடங்களை ஆக்கிரமிப்பு செய்தும் கழிவு நீரை வைகை ஆற்றில் கலக்க செய்து மாசுபட செய்து கொண்டு இருக்கிறார்கள். NTC மருத்துவமனை நிருவாகத்தினர் அளவீட்டை குறைத்து, சொத்துவரி செலுத்தி வருகிறார். மேலும் தொழிலாளர்களுக்கு முறையான கணக்கீடு செய்து தொழில் வரி செலுத்தாதினால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. வருவாய் இழப்பீடுக்கு காரணமான மாநகராட்சி அலுவலர்கள், முன்னாள், இன்னாள்

அலுவலர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்தும், NTC மருத்துவமனை (NTC Hospital) பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1971-ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்திற்கு Directorate of Town and Country Planningன்படி ஒப்புதல் பெறவில்லை.

மேலும் இம்மருத்துவமனை பொது மக்கள் கூடும் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் உரிமம் சட்டம், 1965 ன் பிரிவு 2 (8)ன்படி (Section 2 (8) of the 5 N.P.G. (License) Act 1968ன்படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பது அவசியமாகும். ஆனால் NTC மருத்துவமனை நிர்வாகத்தினர் எந்த அனுமதியும் பெறவில்லை.

மேலும் இக்கட்டிடம் மருத்துவமனையாக செயல்படுவதால் கட்டிடத்தில் மருத்துவனை செயல்படுவதற்கு முன், வருவாய் துறையிடம் முறையாக அனுமதி பெறவில்லை. மேலும் NTC மருத்துவமனை முறையாக அனுமதியுடனும், கட்டிட அனுமதியுடன் முறையான அளவீட்டின்படி கட்டப்பட்டுள்ளதா என்று கண்காணிக்கத்தவறிய சம்மந்தப்பட்ட மாநகராட்சி உரிய அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும் NTC மருத்துவமனை (NTC Hospital) முற்றிலும் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் இம்மருத்துவமனையை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971-பிரிவுகள் 56 (1) மற்றும் 57, உடன்படிக்கப்பட்ட – பிரிவு 85-ன் கீழ் Stop Work Notice / Notice Calling for Approved Plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக – வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் (Lock and Seal and Demolition Notice) வழங்கியும் மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுக்க உத்தரவிட்டும், இது குறித்து புகார் மனு பதிவு தபால் 01.12.2022 அன்று அனுப்பியுள்ளேன். நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென்று தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகவும் பணிவன்புடன், தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**2. 21.12.2022 மற்றும் 13.2.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதங்கள் வாயிலாக மதுரை மாநகராட்சி ஆணையரிடமிருந்து இம்மனு மீதான அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.**

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 28.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி, மண்டலம்–2ல் (வடக்கு) வார்டு எண்.22 தத்தனேரி மெயின்ரோடு, கீழ வைத்தியநாதபுரம் கதவு எண்.187, மதுரை–18ல் இயங்கிவரும் NTC மருத்துவமனை, தரைத்தளம் மற்றும் மூன்று மாடிகளில் இயங்கிவருகிறது. இம்மருத்துவமனைக் கட்டடம், மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட கட்டட அனுமதியை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவமனைக்கான சொத்துவரி மற்றும் தொழில்வரியை மருத்துவமனை நிர்வாகம் குறைவாகவே செலுத்திவருகிறார்கள் மற்றும் மருத்துவர், செவிலியர்கள், போன்றோர் முறையாக தொழில் வரி செலுத்தாத காரணத்தால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

இக்கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டுக் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் பிரிவு 2(8) (Section 2(8) of the Tamil Nadu Public Building(Licensing Act 1965)ன் படி முறையாக உரிமம் பெறவில்லை. மேலும் இக்கட்டிடத்திற்கு 1971ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்தில் Directorate of Town and Country Planningன்படி ஒப்புதல்

பெறவில்லை. எனவே சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் NTC மருத்துவமனையை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் படி Lock and Seal and Demolition Notice மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**4. மதுரை மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் 28.06.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட மனுவினையொட்டி மதுரை மாநகராட்சி மண்டலம் 2, வார்டு 22 தத்தனேரி மெயின்ரோடில் இயங்கி வரும் NTC மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து வரைபட நகல் கோரப்பட்டுள்ளது. மேலும் கட்டட அனுமதிக்கு மாறாக மேற்கண்ட மருத்துவமனை கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக பெறப்பட்ட புகார் மனுவையொட்டி, மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்தை அளவீடு செய்வதற்கான Section 131 Notice வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அம்மருத்துவமனையை அளவீடு செய்து, அங்கு விதிகளை மீறி கட்டடம் கட்டப்பட்டிருப்பின், அக்கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Planning Act 1971–ன்படி Stop work Noice / Notice calling for approved Plan அறிவிப்பினையும் மேலும் Lock and Seal, De-occupation and Demolition Notice மாநகராட்சியால் வழங்கிடவும் தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்து வரி மற்றும் தொழில் வரி குறித்த பொருள் மதுரை மாநகராட்சி நிர்வாக அலுவலகத்தை சார்ந்ததால், அதன் விவரங்களை இம்முறை மன்றத்தில் அளிக்க இயலவில்லை. மேலும் இந்நேர்வு தொடர்பாக மாநகராட்சி ஆணையர் / உதவி ஆணையரிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம்-2 இல் தந்தனேரி ரோடு, கீழ் வைத்தியநாதபுரம் கதவு எண்.187ல் இயங்கிவரும் NTC மருத்துவமனையின் கட்டடம் அனுமதிக்கு மாறாக விதி மீறி கட்டப்பட்டுள்ளதாகவும், இம்மருத்துவமனைக்கான சொத்துவரி குறைவாக வசூல் செய்வதாகவும், அம்மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கான தொழில் வரி குறைவாக வசூல் செய்வதால், மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்து, தனது மனுவின் மீது உரிய விசாரணை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மாநகராட்சி பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து வரைபட நகல் கோரப்பட்டுள்ளது என்றும், அம்மருத்துவமனையின் கட்டடத்தை அளவீடு செய்வதற்கான பிரிவு 131ன்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்றும் அளவீட்டிற்கு பின்னர், அம்மருத்துவமனை விதி மீறி கட்டப்பட்டு இருந்தால் Tamil Nadu Town and Country Planning Act 1971ன் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அம்மருத்துவமனை கட்டடத்திற்கான சொத்துவரி மற்றும் அம்மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களிடம் தொழில்வரி வசூல் செய்வது மதுரை மாநகராட்சி நிர்வாக அலுவலகத்தை சார்ந்தது எனவும் மதுரை மாநகராட்சி மண்டலம் - 2ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட மருத்துவமனை குறித்து 1.12.2022 அன்று புகார் மனு அளித்தும், பின்னர் 14.12.2022 அன்று இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்தும் அதன் தொடர்ச்சியாக 21.12.2022 நாளிட்ட இம்முறைமன்ற அறிவிப்பில் அறிக்கை கோரப்பட்டும், 13.2.2023 நாளிட்ட நினைவூட்டு அனுப்பப்பட்டும், **விசாரணை நாள் வரை மதுரை மாநகராட்சி மண்டலம் – 2ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெளிவாகிறது. மதுரை மண்டலம்–2ன் அலுவலர்களின் இத்தகைய அலட்சிய போக்கை இம்முறைமன்றம் சுட்டிக் காட்ட விழைகிறது. இவ்வாறான பணியில் மெத்தனமாகவும் அலட்சியமாக செயல்படும் மதுரை மாநகராட்சியின் மண்டலம் –2ன் அலுவலர்களின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.** மேலும், NTC மருத்துவமனை கட்டடத்திற்கான சொத்துவரி விதிப்பது, அம்மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களிடம் தொழில்வரி வசூல் செய்வது, மதுரை மாநகராட்சியின் நிர்வாக அலுவலகத்தை சார்ந்தது என்பதால் அதற்கான விவரங்களை தன்னால் அளிக்க இயலவில்லை என பொத்தாம் பொதுவான காரணத்தை தெரிவித்துள்ள உதவிப் பொறியாளரின் வாதம் ஏற்கத்தக்கதல்ல.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக,

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rulesன்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் NTC மருத்துவமனைக்கு குறைவாக சொத்துவரி விதிப்பதாகவும், பணிபுரியும் ஊழியர்களுக்கான தொழில்வரி முறையாக வசூலிக்கப் படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் இதற்கான ஆதார ஆவணங்களை சமர்பிக்கவில்லை. வருங்காலத்தில், இம்மாதிரியான சொத்து வரி, தொழில் வரி, குறித்தான புகார்களுக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

**மனுதாரர் 1.12.2022 நாளிட்டு புகார் மனு அளித்தும் மனுதாரரின் புகாரின் மனு மீது 21.12.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் இம்முறைமன்றத்தால் அறிக்கை கோரப்பட்டும், 13.2.2023 நாளிட்ட நினைவூட்டு அனுப்பப்பட்டும், எவ்வித முயற்சியும், நடவடிக்கையும் எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையாளரை பொறுப்பாக்கி, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.**

மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு NTC மருத்துவமனையிலிருந்து வரைபட நகல் உடனடியாக பெற்றும், அம்மருத்துவமனையை உடன் **அளவீடு செய்தும் அளவீட்டிற்கு பின்னர் அம்மருத்துவமனை கட்டடம் விதி மீறி கட்டப்பட்டு இருந்தால் Tamil Nadu Town and Country Planning Act 1971ன்படி சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மண்டலம் –2ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி**

இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், அம்மருத்துவமனை கட்டடத்திற்கு முறையான சொத்துவரி விதிக்கவும் அம்மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களிடம் தொழில் வரி வசூலிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அறிக்கை அனுப்புமாறு மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Commissioner, Madurai Corporation is directed to deal with the indifference and apathy besides complicity and collusion on the part of the zonal officers concerned who had not taken action against the Building violations till the receipt of the petition in the Forum in a strict and uncompromising manner. It should be ensured that the Professional Tax should be collected comprehensively as per the rules of the Madurai Corporation without any leakage and under assessment and non-assessment commensurate with the employee strength. The role of the zonal head, the Assistant Commissioner, leaves much behind to be desired by the leadership failure in the case. The Director of Municipal Administration is directed to issue necessary instructions to the Madurai Corporation Commissioner and send a report to this Forum in the next 45 days.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம் /-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி, மனை எண்.5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர், மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை – 2.
3. உதவி ஆணையர், மண்டலம் - 02, மதுரை வடக்கு, மதுரை மாநகராட்சி, மதுரை.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer) நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர் (முகூபொ)